**குறள் கொடுத்த வாழ்வு- வெற்றிக்கு மாமருந்து!**

**முனைவர்.கா.அரங்கசாமி**

ஓர் அடி எடுத்து நடக்க ஆயிரம் கிடாய் கேட்டதாம் வெள்ளைக் கோயில் பக்கம் உள்ள அய்யன் கோயில் மாமுனி. அய்யனுக்குக் காவல் தெய்வம் வேண்டுமே? என் செய்வது? கொங்கு நாட்டுப் பெரியவர்கள் வல்லவர்கள் அல்லவா? அந்த மகாமுனியிடம் 'ஆடிக்கு ஆயிரம் கிடாய் தருகிறோம்' என்று வேண்டிட, அதுவும் 'அடிக்கும் ஆடிக்கும்' உள்ள வேறுபாட்டைப் பெரிதாக எண்ணாமல் ஒப்புக் கொண்டு வந்து விட்டதாம்.

இந்தக் கதையைக் கேட்டு, வியந்தபடியே ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் என் பெற்றோர்களுடன் இரட்டைக் கிடாய் வெட்டி, இரட்டைப் பொங்கல் வைக்க அய்யன் கோயில் சென்றோம். மகாமுனிக்கு அருகில் சென்றதும் அங்கே பரந்து கிடந்த இரத்தச் சேற்றைப் பார்த்ததும் எனக்கு எப்படியோ ஆகிவிட்டது. அன்று ஏற்பட்ட வைராக்கியமான புலால் வெறுப்பு மறுப்பாகி, மாண்பாகி எனக்குத் தந்திருக்கின்ற நலத்துக்கும், வளத்துக்கும் அளவு கூற முடியாது.

உணவு ஒழுக்கமே உணர்வு - அறிவு - பண்பு ஆன்ம ஒழுக்கங்களுக்கு அடித்தளம். வீதியோரங்களில் - சாலையோரங்களில் எங்குப் பார்த்தாலும் மனிதனைக் குடிப்பதற்கும் அரக்கத்தனத்தை வளர்க்கும் புலால் தின்பதற்கும் தூண்டி விட்டு 'வாவா' என்றழைக்கும் கடைகள். உணர்வுகளைத் தூண்டும் கடுமையான காரம்; மனிதனை விலங்குத் தன்மைக்கு ஈர்க்கும் குடிவகைகள், காமக் கிளுகிளுப்பூட்டும் திரைப்படங்கள், போதையிலே மிதக்க வைக்கும் 'வாயில் வைக்கும் கொள்ளிகள்' அரசியல் பகல் கொள்ளையர்க்கும் ஆதிக்கச் செல்வர்களும் ஆனந்தம் தரும் கேளிக்கை விடுதிகள்; பேதையரும், போதையரும் உலாவரும் நட்சத்திர விடுதிகள்; மனித மனத்தை மாண்பை மெல்ல மெல்ல அரித்து அறவே அழிக்கும் ஆரவார ஆர்ப்பாட்ட வெறிக் கூத்துகள்; வணிகர்களை, முதலாளிகளை மேலும் மேலும் மக்களைச் சுரண்டிக் கொழுக்கத் தூண்டும் ஆடம்பரப் பொழுது போக்குக் கேளிக்கைகள்; அனைத்துக்கும் மூலம் உணவு ஒழுக்கம் இல்லாமையே!

www.tamilarangam.in

அச்சமின்மை முதலாக அடக்கமுடைமை அடியாக இருபத்தியாறு பண்புகளைக் கொண்டவனையே 'சத்துவ குணத்தான்' என்பர் சான்றோர். 'சத்துவ குணம்' என்பது அறிவராவதற்குரிய (ஞானியராவதற்குரிய) பண்புகளாகும். சத்து என்பதே அறிவாகும். உணவு ஒழுக்கமின்மை, சத்துவ குணத்தைச் சிதைத்து அந்தச் சிதைவின் மீது அரக்கக் குணத்தையும், அடிமைத் தாகக் குணத்தையும் ஆர்ப்பரிக்க வைக்கின்றது. கடுமையான புளிப்பு அடிமைத் தனத்தையும் கடுமையான காரப் புலவு அரக்கத்தனத்தையும் வளர்ப்பன.

இன்று பொது ஒழுங்கு - சமுதாய ஒழுங்கு - மக்களின் மாண்புகள் யாவும் அழிக்கப்பட்டு பணப் பேயின் ஆட்சிக்குட்பட்டுப் போனதன் காரணமே அரக்க - அடிமைப் பண்புகளை வளர்த்ததன் விளைவே. புலால் மறுத்தவனை அனைத்துயிரும் போற்றும் என்பதும், அவன் அறிவனாக மலர்வான் என்பதும், அவனுக்கு உடல் - உள்ள - ஆன்ம நோய்கள் யாவும் இல்லாததாகும் என்பதும் கடந்த கால வாழ்வில் யான் கண்ட வள்ளுவ உண்மையாகும்.

எங்கள் வீட்ழல் எந்நேரமும் தேனீர் கொதித்துக் கொண்டே இருக்கும். ஒரு நாளில் பத்து முறையாவது தேனீர் அல்லது காபி குடிக்க வேண்டும். பலர்க்கு வேண்டிய நேரத்தில் தேனீர் - காபி இல்லையென்றால் வாழ்;க்கை இருண்டு விடும். எனது பத்தாம் வயதிலேயே தேனீர் - காபியை வெறுத்து ஒதுக்கினேன். அதனால் நான் பெற்ற நலன்களைச் சொற்களால் அளவிட்டுக் கூற இயலாது. பத்து மணிக்குக் கல்லூரி வந்ததும் யாவரும் பதினொரு மணிக்குள் தேனீர் -காபி குடித்தாக வேண்டும். மதியம் கண் மயங்க அறுசுவை உணவும் வேண்டும். ஒருநாள் குடிக்கும் வாய்ப்பு இல்லையேல் வாழ்க்கை நரகம் ஆகிவிடும். தேடி அலைந்து குடித்த பின்னரே உயிர் வரும். பழக்கம் பொல்லாதது - பேயோடாயினும் பிரிய முடியாது - என்பது உண்மைதான் - ஆனால் பேராசிரியர் என்பதற்கு ஏதாவது சிறப்புத் தகுதிகள் வேண்டாமா? குடிப்பவர்களைக் கேட்டுப் பாருங்கள் பழகிப் போச்சு – விட்டுவிட முடியவில்லை' என்று தம்மைத் தாமே தாழ்த்திக் கொண்டு கழிவிரக்கம் கொள்கின்றனர். நான் மனத்திற்குள்ளேயே சிரித்துக் கொள்வேன்.

இதனைப் படிக்கின்ற நீங்கள் கேட்க நினைப்பதுவும் எனக்குப் புரிகிறது. காபி - தேனீர் குடிப்பது குற்றமா என்று? எவன் தன்னை ஆள்கின்றானோ அவனே மனத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்து அறிவுலகின் படியேற முடியும்.

www.tamilarangam.in

தன்னை ஆள முதலில் வேண்டுவது ‘ நாவடக்கம் - சுவையடக்கம்’ ! பின்னரே வெற்றியின் முதற் படியாகிய தீய உணர்வடக்கம் வரும்.

ஏழைக் குடும்பம். கூலிவேலை செய்கின்ற பெற்றோர். மகள் திரைப்படப் பித்தி. மகன் திரைப்பட வெறியன். பெற்றோர் திரைப்படம் பார்க்க பணம் தர மறுக்கின்றனர், தற்கொலை அல்லது ஓடிப்போதல் மக்கள் செய்யும் மகத்தான செயல். பிற்பகலில் கல்லூரி வகுப்பறைகளில் பாதிக்குமேல் வருகையில்லை யென்றால் அன்று புதிய படம் திரையில் ஓடுகின்றது என்பது இலக்கணம். காலை அலுவலகம் போகும் கணவனை மனைவி ‘ மணி பத்தாகப் போகிறது. நேரத்தில் போனா என்ன?’ என்று துரத்துகின்றாள். நாட்டுப்பற்று எனத் தவறாக எண்ணி ஏமாற வேண்டாம். அன்று காலைக் காட்சிக்கு அவள் சீட்டுப் பதிவு செய்து விட்டுத் துடிக்கின்றாள் என்பது இல்லற நியதி. இவ்வாறு ஆட்டுமந்தைகளாய்த் திரைப்பட மோகத்தால் மக்கள் கெடுகின்றனரே, ஏன் தெரியுமா? மனித மனத்தில் உள்ள விகாரமான - விலங்குத்தனமான - வக்கிரமான - இழிவான - கேவலமான -அசிங்கமான உணர்வுகளுக்குத் திரைப்படங்கள் உணவாகி வடிகால் அமைக்கின்றன. பின்னர் அவ்வுணர்வுகளின் ஆதிக்கத்தை ஆழப் பதித்து மனிதவினத்தை மூடத்தனத்தில், அடிமைத் தளத்தில் முறையற்ற வன்முறையில் வீழ்த்துகின்றன.

நலம் ஏதும் இல்லாத நடிகை - நடிகரோடு தம்மை இணைத்தும், அணைத்தும் அவர்களின் நிழல்களாகத் தம்மை ஆக்கிக் கொண்டும் போலியானஇ பொய்யான பகல் கனவுகளில் மிதக்கத் தொடங்குகின்றனர். அதனால், உண்மையானஇ எதார்த்தமான வாழ்க்கையின் உண்மைகளைப் போராட்டங்களைக் கண்டிட, எதிர் கொண்டிட அஞ்சி நழுவியோடுகின்றனர். விளைவு நாட்டில் வன்முறைக் கொள்ளை - காமக் கயமை யாட்சி - வெளிக்கூத்தின் காட்டாட்சி - ஆக்கமும், ஊக்கமும், உயர்தம் மாண்பும் மறைகின்றன. உணவு ஒழுக்கம் இல்லை - உணர்வு ஒழுக்கமும் இல்லை. முடிவு அறிவு ஒழுக்கமும் அற்றுப் போய் விட்டது.

“தண்ணீருக்குள் இருக்கும் மீன்கள் எவ்வளவு தண்ணீரைக் குடித்தன” என்று எப்படிக் கணக்கு எடுக்க முடியும்? என்று கேட்ட சாணக்கியன், ‘அவ்வாறே அரசியலில் - பதவியில் இருப்பவர்கள் எவ்வளவு கொள்ளையடித்தார்கள் என்பதையும் சாதாரண, சராசரி மக்கள் கண்டறிய

www.tamilarangam.in

முடியாது' என்கின்றான். எனவே இந்திய தேசிய பாரம்பரியப் பண்பாகிய இந்த ஊழல் வாழ்க்கைக்குக் காரணம் யாது? நல்லறிவு அடங்கப் புல்லறிவும், காரறிவும் (திருட்டு இருட்டறிவு) உயர்வடைய விட்டவர்கள் யார்? உணவு - உணர்வு ஒழுக்கம் இல்லை, அறிவு ஒழுக்கமும் இல்லை. மேலும் இன்று ஆன்ம ஒழுக்கமும் இல்லாதாயிற்று. ஆன்மீகச் சாமியார் வேடம், காணாமல் ஓடிப் போன காஞ்சி முதல் பிரேமானந்தா வரை பெரிய பெரிய இடங்களின் மகத்துவத்தை நமக்கு நன்கு காட்டி விட்டன. செல்வாக்கு மிக்கவர்களின் காமன்விழா மேடையாக மடங்கள் மாறிப்போக, மக்கள் அவர்களைத் தெய்வ அவதாரங்கள் எனக்கொண்டாட, கடவுளர்கள் அழுது புலம்பி நாட்டை விட்டே ஓடிப்போக நல்லவர்கள் வாய்மூடி அழுது புலம்புவது ஏன்?

இன்று நாட்டில் பிறர் துயர் துடைக்கத் துடிக்கும் உண்மை அறிஞர்கள் உண்டா? ஆன்மீகச் செல்வர்கள் இருக்கின்றார்களா? அரசியல் அறிஞர்களைத் தேடிக் காண முடியுமா? தமிழ் - தமிழ்மானம் - பண்பாடு - தமிழ் உணர்வு காசுக்கு விலை போய் விட்டனவே! இவற்றையெல்லாம் மீண்டும் - கண்டெடுப்போர் யார்? தமிழறிஞர்கள் ஒட்டு மொத்தமாக எங்கே ஓடி ஒளிந்து கொண்டனர்? அறிவு ஒழுங்கோடு பண்பு ஒழுங்கு பேணாப் பெருங் குற்றமே மேற்கூறிய வீழ்ச்சிகட்கெல்லாம் காரணம் என்பதை உணர வேண்டாமா?

எங்கள் மூத்த மகன் பத்தாம் வகுப்புக்கு வந்ததும் நாங்கள் 'இனித் திரைப்படம் பார்ப்பதில்லை' என்று முடிவினை எடுத்தோம். அதனால் விளைந்த வளங்கள் ஏராளம். தொலைக்காட்சியும், திரைப்படமும் நன்மைகளே செய்வதில்லையா? என்று நீங்கள் கேட்பது எனக்குள் தெரிகின்றது. கால்படி அரிசி, முக்கால்படி மணல் கலந்து சமைத்து வைத்துவிட்டு, மணலைப் பொறுக்கி விட்டுச் சாப்பிடச் சொன்னால் எப்படி இருக்கும் என்பதைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். வன்முறை காமக் களியாட்டம், வெறிக்கூத்துக் காட்சிகள் முக்கால் பங்கு ஏதோ சில நல்லவை கால் பங்;கு; விளைவு மக்கட் கூட்டம் காமக் கழிசடைக் கூட்டமாக மாற்றம் பெற்றுத் தினமும் ஐந்து ஆறு காட்சிகள் காண்பதே வாழ்க்கை என்னும் தாழ்நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. சின்னஞ்சிறு பிஞ்சு நெஞ்சங்கள் மணிக்கணக்கில் தொலைக்காட்சிப் பெட்டி முன் அமர்ந்து பார்க்கக்கூடாதன கேட்கக் கூடாதனவெல்லாம் கண்டும் கேட்டும் பழுத்து வெம்பி வீழ்ந்து வீண் போகின்றன. இலக்கியச் சிந்தனைகள், ஆன்மீக அறநெறிகள் சந்திக்க ஆளின்றிக் கிடக்கின்றன. பலநாள் பட்டினி கிடந்த நாய் சோற்றைப் பார்ப்பது

www.tamilarangam.in

போல, இளமை திரை நாயக நாயகிகளைப் பார்த்துப் போதை யடைந்து பேதமைப்பட்டுக் கிடக்கின்றன.

வேலை கிடைக்கவில்லை! பதவி உயர்வு உடனே கிடைக்கவில்லை!! மாற்றம் வேண்டிய இடத்துக்குப் பெற முடியவில்லை!! உழைத்துத் தேடிய பணத்தில் வாங்கிய பரிசுச் சீட்டுக்குப் பரிசும் கிடைக்க வில்லை!! எனவே வாழ்க்கை முடிந்து விட்டது என்ற புலம்பல் எங்கும் கேட்கிறது. குறிக்கோளை முன் வைத்து உண்மையாக உழைத்தால் உயர்வு என்றும் உண்டு என்பது உலக உண்மை. இன்று அப்படி நினைப்பவர் யார்? ஒரே நொடியில்இ மணியில், நாளில் கோடி கோடியாய்ச் சேர்க்க வேண்டும் என்னும் பண வெறியின் ஆதிக்கப் பிடியில் மக்கள் அகப்பட்டுக் கிடக்கின்றனர். முறையற்ற - நேர்மையற்ற ஆசைகளைத் திரைப்படமும், அரசியலும் உரமிட்டு வளர்ந்துச் சமுதாய அறிவுக்கு ஆலவட்டம் வீசுகின்றன.

படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் வழிப்பறிக் கொள்ளைகளில் ஈடுபடுகின்றனர். காரணம் சமுதாய அழுகல் நோயைப் பரப்பும் அரசியலும் அவர்களை வன்முறையில் ஈடுபட வழிக்காட்டுகின்றன, தன்மானமும், தன்னறிவும், இனமானமும், மொழியுணர்வும், கொள்கைகளில் வரையாத வலிவும் உடையவர்களை இன்று காண்பது அரிதிலும் அரிதாகி விட்டது.

பணம் பணம் என்னும் மூலமந்திரமே இன்று எங்கும் எதிலும் எதிரொலிக்கக் கேட்கின்றோம். தன்மானம் இழந்த பதவி வேண்டாம். நீதி நேர்மையற்ற செல்வம் வேண்டாம், பணம் கொடுத்துப் பாவவழி வருவன எதுவும் வேண்டாம் மக்களை மடமைப் படுத்திச் சுரண்டிக் கொழுக்கும் கொடுமையும் வேண்டாம் நான் முழுநிறை மனிதனாக இருக்கின்றேன். அதுவொன்றே போதும் என்று உரத்த சிந்தனையோடு விளங்கும் மாமனிதர்களைத் தேடிக் காண வேண்டியுள்ளது.

இளமை முதல் இன்றுவரை எனது விருப்பங்கள் எதிர் பார்ப்புகள் நிறைவேறாத போது என்னை நிமிர்ந்து நிற்கச் செய்து மேலும் மேலும் என் வழியில் - இயன்ற குறள் வழியில் - துணிந்து பயணம் செய்யத் தூண்டி வருவது வள்ளுவத்தின் உலக மாந்த நேயக் குறளான ஒரு மாணிக்கக் குறளாகும். அக்குறள்,

www.tamilarangam.in

“ யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்” என்பதாகும்.

இக்குறள் துறவிகட்குக் கூறியது என்று வள்ளுவர் உள்ளம் அறியாதவர்கள் கூறுவர். ‘தேவைக்கு மேல் வைத்திருப்பது - தேடுவது திருட்டு - சுரண்டல் - போராட்ட வித்து” என்பதை உணர்ந்து எளிய தேவைகளை எல்லைப் படுத்தி ஊருக்கும் உழைப்பதில் இன்பங்காணும் உயர்பெறும் ஒழுக்கத்தை, நிறை யறிஞர் தன்மையை இக்குறள்வழி வள்ளுவர் காட்டுகின்றார்.

இக்குறளின் பயனை அடுத்த குறளில் உலகுக்கு மிக நன்றாக எடுத்து விளக்குகின்றார் வள்ளுவர்.

“துறந்தபின் ஈண்டு (இவ்வுலகில்) இயற் பால பல எனவே, வேண்டின் (நிறையின்பம் உலகமக்கள் பெற வேண்டின்) பலரும் தான் தனது என்பதைத் துறந்து நாம் நமது எனப் பொதுநலம் போற்றும் சான்றோர் ஆகுக” என்கின்றார்.

உலகம் ஒரு குடும்பம் - உலக மாந்த ரெல்லாரும் என் உடன் பிறந்தோர் என்னும் பொதுவறத்தின் ஆணி வேராக இக்குறள் - மன அழுக்கை - ஆசைப் பேயின் ஊழிக் கூத்தைப் போக்கி மனித மனத்தைத் தூய்மைப் படுத்தும் மாமருந்து. கப்பல் நீரில் மிதக்கலாம், பயணம் செய்ய! கப்பலில் நீர் நுழைந்தால் வாழ்க்கைப் பயணம் முடிந்துவிடும்; அதுபோல ஆசைக் கடலில் வாழ்க்கைக் கப்பலை, பேராசையைத் துறத்தல் என்னும் சுக்கானைப் பிடித்து அறத்துறை என்னும் மாந்த நிறையின்ப நகர்க்குச் செலுத்து, என்று வள்ளுவம் கூறுகிறது. இங்கு துறத்தல் என்பது தனக்கென வாழ்வதைத் துறந்து பிறர்க்கெனவும் வாழ்தல். அதுவே வேண்டின் உண்டாகத் துறத்தல். நடந்திரு - வாழ்ந்திரு - வளர்ந்திரு - உயர்ந்திரு - ஆசைப்பேய்க்கு அடிமை படாதே, சறுக்கல் - ஏமாற்றங்கள் - தடைகள் - வளர்ச்சிகள், குறுக்கீடுகள் ஏற்படும் போதெல்லாம் ஆசை வலையை அறுக்கப் பயன்படும் போர்வாள் இக்குறள் என்பதை உணர்க.

நாம் மட்டும் உலகம் அன்று; உலக ஆற்றலில் நாடும் ஓர் அணு. அணு ஆற்றல் பெற வேண்டின் அடங்கிப் பணிந்து, கூனிக்குறுகி இலவசச் சலுகை தேடின் முடியாது. முட்டி மோதி எதிர்ப்புகளை - ஆசை பாசம் மோகம் காமம் யாவற்றையும் உடைத்தெறிந்து முழுநிறை மாந்தனாக வேண்டும். உலகத்தில் தீமையின் - பாவத்தின் சுவடுகளையே இல்லாதாக்க வேண்டும். அதற்காக

www.tamilarangam.in

உனது எனது என்பவன வற்றைத் துறக்க. யாதாயினும் துறக்க, சிறு சிறு ஆசைகளைத் தேடி ஓடி நாயென வாழாதே. அடிமைப் படாதே, மாந்தவின மேம்பாடு என்னும் இனநலம் ஈண்டு இயற்ற வேண்டும். நோதல் இல்லாத உலகம் படைக்கப்பட வேண்டும்.

**“யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்”**

நீங்க வேண்டிய வற்றை நீங்குக! சமுதாயத் தீமையை மற்றோரையும் நீங்கிடச் செய்க. உடல் -உள்ள - சமுதாய நோய்கள் உலகில் இல்லாதாக்குக. “அறிவு பெற்றதன் பயன் பிறர்படும் நோய் போக்குதல்” என்பது வள்ளுவர் ஆணை, அறிவு ஆக்கம்பெற - சமுதாயம் பயன்பெற இக்குறள் ஒவ்வொரு நொடியும் ஒலித்திட வேண்டும். வாழ்வில் ஒளியேற்றும் மூலமந்திரம் இக்குறள். அறிவின் நிறைவால் நிறைமாந்தவின்பம் பெற வழிகாட்டும் ஒளிவிளக்கு இக்குறள். வாருங்கள்! இக்குறள் வழிச் செல்வோம்!! மண்ணில் விண்ணகம் படைப்போம்!! இக்குறளே மனித நேய வெற்றிக்கோர் மாமருந்தாம்.

******

www.tamilarangam.in